# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE HINDU TAMIL DATED 07.05.2025

புதுவை மத்திய பல்கலை. ஆயுஷ் இயக்ககம், மருந்து கட்டுப்பாட்டு துறைகளிடையே

# ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி**

ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில், புதுவை மத்திய பல்கலைக்கழகம் மற்றும் அயுஷ் இயக்ககம், புதுச்சேரி அரசு மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை ஆகியவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்நிகழ்வில் புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு பேசுகையில், "ஆயுர்வேதம், யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவத் துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும்" என்று கூறினார்

அயுஷ் இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் ஆர். ஸ்ரீதரன் பேசுகையில், "இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும் நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும்" என்று கூறினார்.

மருந்துகள் கட்டுப்பாட்டு துறையின் கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரி ஆனந்தகிருஷ்ணன், சர்வதேச தொடர்புகள் துறை பேராசிரியர் எஸ். விக்டர் ஆனந்த்குமார் உள்ளிட்டோர் பேசினர். வேதியியல் பேராசிரியர் பாலா மணிமாறன் நன்றி கூறினார்.




புதுவை மத்திய பல்கலை, ஆயுஷ் இயக்ககம், மருந்து கட்டுப்பாட்டு துறைகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAMALAR DATED 07.05.2025

## புதுச்சேரி பல்கலைக் கழக ஆயுஷ் இயக்கம் மருந்துகள் கட்டுப்பாட்டு துறை ஒப்பந்தம்



■ புதுச்சேரி பல்கலைக்கழக ஆயுஷ் இயக்கம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது.

**புதுச்சேரி, மே 7–**

புதுச்சேரி பல்கலைக் கழக ஆயுஷ் இயக்கம், புதுச்சேரி மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையுடன் ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடந்தது.

பல்கலைக்கழக வேந்தர் பிரகாஷ் பாபு தலைமை தாங்கி, பேசுகையில், 'இந்த ஒப்பந்தம் கல்விசார் நுண்ணறிவும், அரசின் ஒழுங்குமுறை அனுபவமும் இணைந்துள்ள ஒரு முக்கிய முயற்சியாகும். ஆயுர்வேதம், யோகா மற்றும் நாசுரபதி, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவத் துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக் கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும்' என்றார்.

ஆயுஷ் இயக்கத்தின் இயக்குநர் ஸ்ரீதரன் பேசுகையில், 'இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும் நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும்' என்றார்.

மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையின் கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரி ஆனந்தகிருஷ்ணன் 'இந்த ஒப்பந்தம் ஆயுஷ் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். தரமான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் வாய்ந்த மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்வதில் இது துணையாக அமையும்' என்றார். சர்வதேச தொடர்புகள் துறை பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார், வேதியியல் துறையின் தலைவர் சிவசங்கர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில்துறை. ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. வேதியியல் பேராசிரியர் பாலா மணிமாறன் நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 07.05.2025



## ஆயுஷ், மருந்து கட்டுப்பாட்டு துறையுடன் புதுச்சேரி பல்கலை புரிந்துணர்வு ஒப்பந்தம்




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பிரகாஷ்பாபு முன்னிலையில் வேதியியல் துறைக்கும், ஆயுஷ் இயக்குநரகம் மற்றும் மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுச்சேரி, மே 7: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறைக்கும், ஆயுஷ் இயக்குநரகம் மற்றும் மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மருந்தியல், ஆயுஷ் மற்றும் வேதியியல் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில் இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் துணைவேந்தர் பிரகாஷ் பாபு கலந்துகொண்டு பேசுகையில், இந்த ஒப்பந்தம் கல்விசார் நுண்ணறிவும், அரசின் ஒழுங்குமுறை அனுபவமும் இணைந்துள்ள ஒரு முக்கிய முயற்சியாகும். ஆயுர்வேதம், யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவ துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும், என்றார்.

ஆயுஷ் இயக்குநரகத்தின் இயக்குநர் ஸ்ரீதரன் பங்கேற்று பேசும்போது, இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும், நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும் என்றார். மருந்து கட்டுப்பாட்டு துறை அதிகாரி ஆனந்தகிருஷ்ணன் பேசுகையில், இந்த ஒப்பந்தம் ஆயுஷ் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். தரமான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் வாய்ந்த மருந்துகளின் கிடைப்பை உறுதி செய்வதில் இது துணையாக அமையும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் சர்வதேச தொடர்புகள் துறை பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார், வேதியியல் துறை தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான சிவசங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பேராசிரியர் பாலா மணிமாறன் நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THILAI MALAI DATED 07.05.2025

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
மலர் : 4 இதழ் : 324
VOLUME: 4 ISSUE: 324
தினசரி காலை நாளிதழ்
4 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (7-5-2025) புதன்கிழமை
PUDUCHERRY(7-5-2025) WEDNESDAY
செய்திக்கு:94426 34795

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver BEST SERVICE D.K.Kumar
PUDUCHERRY
860 860 5550 94432 55788
புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜுவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM

# இளம் ஆராய்ச்சியாளர்களுக்கான வழிகாட்டி பயிற்சி புதுவைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கியது




புதுச்சேரி, மே.7–

சமூக உள்ளடக்க ஆய்வு மையம் (சிஎஸ்எஸ்ஐ), சமூக அறிவியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள் பள்ளி, புதுவைப் பல்கலைக்கழகம் ஷ கல்வி மற்றும் மேம்பாட்டு ஆய்வுகள் நிறுவனம் (ஐஇடிஎஸ்) உடன் இணைந்து இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎஸ்எஸ்ஆர்), புது தில்லி, நிதியுதவியுடன் 10 நாள் ஆராய்ச்சி முறையியல் பாடநெறி தொடங்கியது.

சிஎஸ்எஸ்ஐ மைய தலைவர் டாக்டர் ஏ. சிதம்பரம் வரவேற்புரை ஆற்றினார். பாடநெறியின் இயக்குநரும், சிஎஸ்எஸ்ஐ இன் உதவிப் பேராசிரியருமான டாக்டர் ஜி. பிரபாகரன், ஆராய்ச்சி முறையியல் பாடநெறியின் நோக்கங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விரிவாக எடுத்துரைத்தார்.

ஐஇடிஎஸ் கௌரவ பேராசிரியர் சுதாகர் வேணுகபள்ளி, இளம் ஆராய்ச்சியாளர் களுக்கான கல்வி முயற்சிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, "இந்திய அறிவு அமைப்பின் வேர்களை உணர்வது முக்கியம்" எனக் கூறி ஐஇடிஎஸ் வெளியீடுகளையும் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு வழங்கினார்.

ஆய்வுகள், கல்வி மற்றும் கிராமப்புற மறுசீரமைப்புப் பிரிவின் இயக்குநர் கே. தரணிக்கரசு, "மேற்கத்திய மற்றும் இந்திய ஆராய்ச்சி அணுகுமுறைகளின் வேறுபாடுகள் மற்றும் உள்ளடக்கத்தின் முக்கியத்துவம்" குறித்து சிந்தனை தூண்டும் உரை நிகழ்த்தினார். சமூகரீதியாக புறக்கணிக்கப்பட்ட மக்களை ஆய்வில் உள்ளடக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் ஐசிஎஸ்எஸ்ஆர் இன் பங்களிப்புகளையும் எடுத்துரைத்தார். பெங்களூரு, கிறிஸ்ட் பல்கலைக்கழகம் பேராசிரியர் பிஜு கே.சி பாம்புஏணி விளையாட்டின் தத்துவ நுண்ணறிவு மூலம் ஆராய்ச்சி செயல்முறை மற்றும் சவால்களை விவாதித்தார்.

புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு, தலைமை உரையில் "பண்டைய இந்திய மொழிகள், குறிப்பாக சமஸ்கிருதம் மற்றும் நெறிமுறை சார்ந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவம்" குறித்தும் "சமூக ஆராய்ச்சியில் ஆஃப்லைன் முறையின் சமயப்பூர்வமான பங்கு மற்றும் அதற்கான சம்பிரதாயப் பொருத்தம்" குறித்தும் பேசினார்.

ஐசிஎஸ்எஸ்ஆர் உறுப்பினர் செயலாளர் பேராசிரியர் தனஞ்சய் சிங் தனது தொடக்க உரையில், துறைகளுக்கு இடையேயான சமூக அறிவியல் ஆராய்ச்சி, வழிமுறைகள் மற்றும் நியாய தத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார். சிஎஸ்எஸ்ஐ இன் உதவிப் பேராசிரியர் டாக்டர் அஞ்சல் குமாரி நன்றி கூறினார்.

# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

MAALAI EXPRESS DATED 07.05.2025



மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாலை நாளிதழ்
மாநிலம் பயனுற!

## புதுவை பல்கலைக்கழகம், ஆயுஷ் இயக்ககம் மற்றும் மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையுடன் ஒப்பந்தம்




புதுச்சேரி, மே 7-

மருந்தியல், ஆயுஷ் மற்றும் வேதியியல் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை மேம்படுத்தும் நோக்கத்தில் புதிய ஒத்துழைப்பு ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு மற்றும் பாரம்பரிய மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் கல்வி மற்றும் தொழில் துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கத்தில், புதுவைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆயுஷ் இயக்ககம், மருந்துகளின் கட்டுப்பாட்டு துறை, புதுச்சேரி அரசு ஆகியவை ஒப்பந்தம் ஒன்றைகையெழுத்திட்டன.

இந்தகூட்டாண்மையின் கீழ், புதுவைப் பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறை வேதியியல் துறை முக்கியப் பங்காற்றும் இந்த ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது, மூவகை அமைப்புகளின் முக்கிய அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. புதுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு தலைமை தாங்கி பேசுகையில், "இந்த ஒப்பந்தம் கல்விசார் நுண்ணறிவும், அரசின் ஒழுங்குமுறை அனுபவமும் இணைந்துள்ள ஒரு முக்கிய முயற்சியாகும் ஆயுர்வேதம், யோகா மற்றும் நேச்சுரோபதி, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகிய ஆயுஷ் மருத்துவத் துறைகளில் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புகளை இது உருவாக்கும்" என்று கூறினார்.

ஆயுஷ் இயக்கத்தின் இயக்குநர் மற்றும் மாநில மூலிகைத் தாவரங்கள் வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான டாக்டர் ஸ்ரீதரன் பேசுகையில், "இந்த ஒப்பந்தம் ஆய்வக அறிவையும் நடைமுறை பயன்பாடுகளையும் இணைக்கும் பாலமாக செயல்படும். நமது பரிசோதனை வசதிகள் மற்றும் ஒழுங்குமுறை அனுபவங்களை பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆராய்ச்சி வளங்களுடன் இணைத்து, செயல்திறன் வாய்ந்த சுகாதார தீர்வுகளை விரைவாக உருவாக்க முடியும்" என்று கூறினார்.

மருந்துகளின் கட்டுப்பாட்டு துறையின் கட்டுப்பாட்டு மற்றும் உரிமம் வழங்கும் அதிகாரியான டாக்டர் ஆனந்தகிருஷ்ணன் 'இந்த ஒப்பந்தம் ஆயுஷ் துறையில் புதுமை மற்றும் வளர்ச்சிக்கான முக்கிய கட்டமாகும். தரமான, பாதுகாப்பான மற்றும் செயல்திறன் வாய்ந்த மருந்துகளின் கிடைப்பை உறுதி செய்வதில் இது துணையாக அமையும்' என்று கூறினார். சர்வதேச தொடர்புகள் துறையின் பேராசிரியர் விக்டர் ஆனந்த்குமார் கூறுகையில், 'கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசாங்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த மூன்று வழி முயற்சி, மருந்து மற்றும் சுகாதாரப் பராமரிப்புத் துறைகளில் கூட்டு ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கொள்கை தாக்கத்திற்கான புதிய வழிகளைத் திறக்கிறது' என்றார்.

வேதியியல் துறையின் தலைவர் மற்றும் ஒப்பந்த ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சி.சிவசங்கர் கூறுகையில் 'ஒரு வருடத்துக்கும் மேலான திட்டமிடல் மற்றும் கலந்துரையாடலின் விளைவாக இந்த ஒப்பந்தம் உருவாகியுள்ளது. இது அரசுப் பிரிவுகளுடனான தொடர்ச்சியான கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பிற்கான நிலையான மேடையை ஏற்படுத்துகிறது' என்றார்.

இவ்விழாவின் முடிவில் வேதியியல் பேராசிரியர் பாலா மணிமாறன் நன்றியுரையை நிகழ்த்தி 'இந்த ஒத்துழைப்பின் மூலம் பல்கலைக்கழகத்தின் கல்விசார் சூழலும் ஆராய்ச்சி திறனும் மேம்படும்' என்று நம்பிக்கையை தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் கல்வி மற்றும் தொழில்துறை, ஒழுங்குமுறை அமைப்புகளுக்கு இடையிலான இணைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது. இது இந்தியா மற்றும் உலகளவில் சுகாதாரத்துறைக்கு நீண்டகால பலன்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.